இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 30-05-2023

# ஏமாற்றுவதில் பலவகை!




'ஏமாத்துறதுலயும் தினுசு தினுசா ஏமாத்துவான்' என்று கிராமத்தில் சொல்வார்கள். அப்படித்தான் இருக்கிறது இப்போதும். புதிய நாடாளுமன்றத் திறப்பு விழாவை முன்னிட்டு புதிது புதிதாக ஏமாற்றுகிறார்கள்.

**மடாதிபதிகளிடம் இருந்து செங்கோலைப் பெற்றுள்ளார் பிரதமர். பெற்றுக் கொள்ளட்டும். அவர் இப்போதுதான் புதிதாக அதிகாரத்துக்கு வருவதாக நினைக்கிறார். நினைத்துக் கொள்ளட்டும். அதற்கு ஏன் சோழர் காலத்துச் செங்கோல் என்று சொல்ல வேண்டும்? அப்படி முதலில் சொன்னது யார்? குருமூர்த்தியாம். இராமேஸ்வரம் கோவிலில் 1212 தூண்களும் ஒரே நேர்கோட்டில் இருக்கிறது என்று சொல்லி கதை விட்டு மாட்டிக் கொண்டவராச்சே அவர். 'துக்ளக்' பத்திரிகை வரலாற்றையே - சோ வரலாற்றையே மாற்றி எழுதிக் கொண்டிருப்பவராச்சே அவர்? அவர் சோழர்கள் வரலாற்றைச் சொல்கிறாராம்?**

**இராஜாஜி சொன்னாராம். மடாதிபதி எடுத்துக் கொண்டு போய் மவுண்ட் பேட்டனிடம் கொடுத்தாராம். மவுண்ட்பேட்டன், நேருவிடம் கொடுத்தாராம். அப்படி கொடுக்கப்பட்ட செங்கோல் எங்கே இருக்கிறது? எங்கோ இருக்கிறது? அதிகார மாற்றத்தின் அடையாளமான செங்கோல் எங்கோ ஒரு மூலைக்குள் முடங்கிக் கிடந்தது.**

இராஜாஜி சொன்னதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று இராஜாஜியின் பேரனே சொல்லிவிட்டார். மவுண்ட்பேட்டனிடம் கொடுத்ததற்கு ஆதாரம் இல்லை என்று மடாதிபதியே சொல்லிவிட்டார். சுதந்திர தினத்தன்று அனைத்து மத நம்பிக்கைப் பிரமுகர்களும் போய் பிரதமர் நேருவைச் சந்தித்ததற்கு ஆதாரம் இருக்கிறது. அப்போது திருவாவடுதுறை ஆதீனம், செங்கோலை தங்களது நினைவுப் பரிசாக வழங்குகிறார். அவ்வளவுதான்.

'ஒரு சாமியார் செங்கோல் கொடுத்தார், அதேபோல் ஒரு சாமியாரை வைத்து செங்கோல் கொடுக்க வேண்டும்' என்று முடிவு செய்திருக்கிறார். தமிழ்நாடாக இருந்தால் அதனை வைத்து தமிழ்நாட்டில் அரசியல் செய்யலாம் என்பதே அவர்களது கணக்கு.

**தமிழ்நாட்டில் இருந்து அனைத்து சைவ மடாதிபதிகளும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களிடம் இருந்து செங்கோலை வாங்கிக் கொண்டார் பிரதமர். சைவ மடாதிபதிகளை வைத்துத்தான் புதிய கட்டடமே திறக்கப்படப் போகிறது என்று கிளப்பினார்கள். ஆனால் நடந்தது என்ன? சைவ மடாதிபதிகளும் அங்கே பார்வையாளர்கள் மட்டுமே. வழக்கம் போல 'அவர்களை' வைத்தே அனைத்து சடங்குகளையும் முடித்துவிட்டார்கள். ஏமாற்றம் யாருக்கு? சைவ மடாதிபதிகளுக்கும் சேர்த்துத்தான்! சோழர்களது செங்கோலைப் பெறப் போகிறார் பிரதமர்! இதனை விட தமிழ்நாட்டுக்கு வேறு பெருமை வேண்டுமா? சைவ மடாதிபதிகளை தனிவிமானத்தில் அழைத்துச் செல்கிறார்கள்! இதனை விட தமிழ் மடாதிபதிகளுக்கு வேறு பெருமை வேண்டுமா? என்ற அலப்பறைகள் எல்லாம் அரைமணி நேரத்தில் இற்று நொறுங்கியது!**

இப்படித்தான் சில மாதங்களுக்கு முன்னால் காசி தமிழ்ச் சங்கமம் என்று கிளப்பினார்கள். காசி தமிழ் சங்கமம் என்று சொல்லி எழுதப்பட்ட பெயர் பலகையில் தமிழ் இல்லை. இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழியில் வரவேற்பு பலகை வைக்கப்பட்டது. ஒழுங்கான இந்தி, ஒழுங்கான ஆங்கிலத்தில் எழுதி வைத்தவர்களுக்கு ஒழுங்கான தமிழ் தெரியவில்லை. (அருகில் உள்ள படத்தை பார்க்கவும்!)

**'அனைத்து விருந்தினர்களையும் வரவேற்கிறோம்' என்று கூட தமிழில் ஒழுங்காக எழுதி வைக்கவில்லை. அந்த அக்கறை கூட இல்லை. ஏனென்றால் இதனை ஒருங்கிணைத்தவர் ஒன்றிய அரசின் பாரதீய பாஷா சமீதி அமைப்பாளரான சாமு கிருஷ்ண சாஸ்திரி. இவர் சமஸ்கிருத அறிஞராம். தமிழ்ச் சங்கமம் எப்படி இருந்திருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டில் இருந்து இலவசமாக 2000 பேரை அழைத்துச் சென்று காசியைச் சுற்றிக் காட்டிவிட்டால் அது தமிழ்ச் சங்கமம் ஆகிவிடுமா? வேட்டி - சட்டையில் பிரதமர் வந்தால் தமிழ்நாட்டை வளர்த்துவிட்டதாகக் கணக்கில் சேருமா? மேடைகளில் திருக்குறள் சொன்னால் போதுமா? பாரதியார் பாட்டை மேற்கோள் காண்பித்தால் எல்லாம் கிடைத்துவிடுமா? 'மூத்த மொழி தமிழ்' என்று ஆண்டுக்கு ஒரு முறை சொல்லி விட்டால் போதுமா?**

**இப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன்னால் திருக்குறளைத் தூக்கிக் கொண்டு தருண் விஜய் என்பவர் வந்தார். இந்தியா முழுமைக்கும் கொண்டு போகப் போவதாக தமிழ்நாட்டில் வலம் வந்தார். என்ன ஆனார் தருண் விஜய்?**

இந்தி என்ற ஒற்றை மொழி நாடாக மாற்ற நினைப்பதைத் திசை திருப்ப நடத்தப்படும் நாடகங்கள் இவை. தமிழைச் சொல்லியாவது தமிழ்நாட்டை ஏமாற்றலாமா என்ற நினைப்பின் வெளிப்பாடுகள் இவை!

தமிழ் மொழி என்பது தனித்த மொழி அல்ல. தமிழன் என்ற இனத்தையும் தமிழ் மொழி தாங்கி நிற்கிறது. தமிழ்நாடு என்ற மாநிலத்தையும் தமிழ் மொழி அடையாளப்படுத்தி நிற்கிறது. எனவே தான், தமிழ்ப்பற்று என்பது தமிழன் பற்றாகவும், தமிழ்நாட்டுப் பற்றாகவும் இருந்தால் மட்டுமே தமிழ்நாட்டில் செல்லுபடியாகும். அதனை உணராமல் காசிக்கு ரயில் விடுவதாலோ, டெல்லிக்கு விமானத்தில் அழைத்துச் செல்வதாலோ தமிழ் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.

* **உலகப் பொதுமறையான திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்படுகிறது.**
* **தமிழ் உள்ளிட்ட மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் ஒன்றிய அரசின் ஆட்சி மொழிகள் ஆக்கப்படுகிறது.**
* **ஒன்றியப் பணிகளுக்கான எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகள் அனைத்தும் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்படும்.**
* **ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி ஆக்கப்படும்.**
* **சென்னை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழ் ஏற்கப்படும்.**
* **கேந்திரிய வித்தியாலயா முதல் ஐ.ஐ.டி. வரையிலான நிறுவனங்களில் தமிழும் பயிற்று மொழி ஆக்கப்படும்.**

- என்று சொல்லும் மனமாற்றம் வராத வரை, இவையெல்லாம் ஓரங்க நாடகங்களாகவே தமிழ்நாட்டு மக்களால் ஒதுக்கித் தள்ளப்படும். கூட்டி அள்ளப்படும்! தூக்கி வீசப்படும்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2023) டோக்கியோவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு (Japan External Trade Organization JETRO) தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ (Mr. Ishiguro Norihiko) அவர்களையும், செயல் துணைத் தலைவர் கசுயா நகஜோ (Kazuya Nakajo) ஆகியோரை சந்தித்து பேசினார். அப்போது ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு அளித்துவரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்து, மேலும் தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீடுகள் செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டில் உற்பத்திக்கான மையத்தை அமைத்திடவேண்டும்!

## ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புத் தலைவரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

டோக்கியோ, மே 30 –

"திறன் மிக்க மனித வளம் உள்ளதால் தமிழ்நாட்டில் உற்பத்திக்கான மையத்தை அமைத்திட வேண்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புத் தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். 23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு, 25.5.2023 அன்று ஜப்பான் நாட்டின் ஒசாகா சென்றார்.

தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் ஒசாகா பயணத்தை முடித்துக் கொண்டு 27.5.2023 அன்று டோக்கியோ வந்தடைந்தார். இந்த அரசு முறை பயணங்களின் போது முதலமைச்சர் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங்களுடன் புரிந் துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, நேற்று (29.5.2023) காலை டோக்கியோவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு (Japan External Trade Organization – JETRO) தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ (Mr. Ishiguro Norihiko) அவர்ளையும், செயல் துணைத் தலைவர் கசுயா நகஜோ (Mr. Kazuya Nakajo) அவர்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு அளித்துவரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார்.

JETRO தலைவருடனான சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:–

வணக்கம், உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. நீங்கள் இதற்கு முன்பு NECஇல் பணியாற்றியதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் நாடு திரும்பும் முன்பு, நாளை அங்கு சென்று பார்வையிடலாம் என்று நினைக்கிறோம். JETRO இந்தியாவுடன் இணைந்து மிகவும் தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க விரும்பும் ஜப்பானிய நிறுவனங்கள் தங்களது வர்த்தகச் செயல்பாடுகளை எளிதில் மேற்கொள்ள முக்கியப் பங்கை ஆற்றி வந்துள்ளது. இதனை மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆட்டோமொபைல், கனரக பொறியியல் உள்ளிட்ட துறைகளுக்கும் விரிவுபடுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

Industry 4.0ஐ நோக்கி தமிழ்நாட்டில் உள்ள அதிக அளவிலான சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முன்னேற்ற இந்தியாவின் ஐ.டி. திறன்களும் ஜப்பானின் உற்பத்தி நிபுணத்துவமும் உதவும். இதைப் போன்ற துறைகளில் நாம் ஒன்றிணைந்து செயல்பட முடியும் என நான் நம்புகிறேன் என்றார்.

இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள், மேம்பட்ட உற்பத்தியில் சிறந்த பங்குதாரர்கள் ஜப்பானியர்கள். எனவே, தமிழ்நாட்டில் திறன்மிகுந்த மனிதவளம் உள்ளதால் 4.0 போன்ற தொழில் நுட்பப் பகுதிகள் மற்றும் மேம்பட்ட உற்பத்திக்கான ஒரு மையத்தை தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதோடு, இந்தியா ஜப்பானிய கூட்டு உச்சி மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்திடவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, JETRO தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ அவர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பான் நாட்டு நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அழைப்பு விடுத்ததற்கும், ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஆதரவிற்கும் தனது நன்றியை தெரிவித்தது டன், சென்னையில் நடைபெறவுள்ள 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றி பெற தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஜப்பான் தொழிலதிபர்களுக்கு அழைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவுக்குள், தமிழ்நாடுதான் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த முன்னணி மாநிலமாக விளங்குகிறது. தெற்காசியாவிலேயே, முதலீடுகளை ஈர்த்திட உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திட நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

நிசான், தோஷிபா, யமஹா, கோமாட்ஸு, ஹிட்டாச்சி போன்ற மிகப்பெரும் நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திட்டங்களைத் தமிழ்நாட்டில் அமைத்துள்ளன.

அது மட்டுமல்ல. ஜப்பான் இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மை திட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில், எப்போதுமே, ஜப்பான் நாட்டின் உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சிகள் தொடர்ச்சியாக எடுத்து வருகிறது. பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்துடன் (METI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், JETRO நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜப்பான் வணிக மற்றும் தொழில் பேரவை (JCCI) ஆகிய நிறுவன ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அல்லாமல், கனகாவா, ஹிரோஷிமா மாகாணங்களுடன் பொருளாதார புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளது.

### வங்கிகளுடன் ஒப்பந்தம்!

ஜப்பான் நாட்டின் மிகப் பெரும் வங்கிகளான, பேங்க் ஆஃப் டோக்கியோ - மிட்சுமிஷி, மிசுஹோ வங்கி போன்ற வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பல மாகாணங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கிய பங்கு ஆற்றிடும் விதமாக, 2030-2031 நிதியாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், பல்வேறு துறை சார்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடத்தி, இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. 2 லட்சத்து 95 ஆயிரத்து 339 கோடி ரூபாய் என்ற அளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 5,596 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4,244 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

ஜப்பானிய நிறுவனங்களுக்கு என்னுடைய சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்...

ஜப்பானிய நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே முதலீடுகளை மேற்கொள்கின்றன. இந்நிலையை சற்றே விரிவுபடுத்தி, உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டங்களிலும் முதலீடு மேற்கொள்ள வருமாறு, இந்தத் தருணத்தில் உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்.

உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வது என்பது உங்களது உற்பத்தித் திட்டங்களை மேம்படுத்தவும் உதவிகரமாக அமையும்.

புதிய தொழில் பூங்காக்களை நாங்கள் அமைத்து வருகிறோம். அதிலும் உங்களது மேலான முதலீடுகளை வரவேற்கிறோம்.

உங்களது தொழிற்சாலைகளை எங்கள் மாநிலத்தில் அமைக்கும் போது அதுதொடர்பான தலைமை அலுவலகத்தையும் எங்கள் மாநிலத்திலேயே அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் இளைய சக்தியை வளமிக்கதாக நாங்கள் மாற்றிக் கொண்டிருக்கிறோம். 'நான் முதல்வன்' என்ற எனது கனவுத் திட்டத்தின் மூலமாக மாணவர்கள், இளைஞர்கள் அனைவரையும் பள்ளி, கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே பல்துறை வல்லுநர்களாக வளர்த்து வருகிறோம். பெண்களை தொழில்நுட்ப வல்லுநர்களாக உயர்த்தி வருகிறோம். எனவே, உங்களது நிறுவனங்களுக்கு மிகச்சிறந்த திறமைசாலிகள் அதிகம் இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.

### தமிழ்நாட்டில் மிகச்சிறந்த திறமைசாலிகள்!

தமிழ்நாடு அரசும், திறந்த மனத்தோடு அனைத்து தொழில் நிறுவனங்களையும் ஊக்குவிக்கும் அரசாக இருக்கிறது.

நிர்வாக உதவி, மனித ஆற்றல் ஆகிய இரண்டும் இணைந்து கிடைக்கும் மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டை ஜப்பானிய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2024 ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த மாபெரும் நிகழ்வுக்கு நீங்கள் அனைவரும் வர வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டின் முக்கிய நிறுவனங்களின் தலைவர்களுடனான மதிய உணவு சந்திப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு உரையாடினார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, Ehime Prefecture துணை ஆளுநர் ஹிடிகி தனாகா (Mr. Hideki Tanaka), தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் மாசாயுகி டகா (Mr. Masayuki Taga), Mitsubishi Electric Corporation நிறுவனத்தின் செயல் அலுவலர் யாசுமிச்சி டாசுனோக்கி (Mr. Yasumichi Tazunoki) மற்றும் சென்னை கிளை தலைவர் டகேசி ஹிரானோ (Mr.Takeshi Hirano), மிட்சுபா கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மேலாண்மை அலுவலர் கோஜி மிசுனோ (Mr. Koji Mizuno), JGC Corporation நிறுவனத்தின் துணைத் தலைவர் சியுசி ஒகாவா (Mr. Syuichi Ogawa), HIROTEC Corporation நிறுவனத்தின் இயக்குநர் யுகியோ நோபுடோ (Mr. Yukio Nobuto), Rengo Company Ltd., நிறுவன அலுவலர் தோஷிநோபு சடா (Mr. Toshinobu Sada), MinebeaMitsumi Inc., நிறுவனத்தின் பொது மேலாளர் ஷிகிரு சுகடா (Mr. Shigeru Tsukada), MURA Co. Ltd., நிறுவனத்தின் செயல் ஆலோசகர் நோபுரு கமாகுரா (Mr. Noboru Kamakura), Yamaha Motor Co. Ltd., நிறுவனத்தின் பொது மேலாளர் ரியுஜி கவாஷிமா (Mr. Riuji Kawashima), JETRO இயக்குநர் காரோ ஷிராஷி (Mr. Kaoru Shiraishi) மற்றும் சென்னை JETRO இயக்குநர் யுகிஹிடே நாஹயமா (Mr. Yukihide Nakayama) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.